முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்த்துணை நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.08.2022, வெள்ளிக்கிழமை

1. கலித்துன்பம் போக்கி மீட்க
கந்தவேலன் ஆற்றலாகவே
அழியாமை வரம் தந்து வந்த
ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
இனிமைபட இருபானேழ்திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 27 நாள், 12.08.2022 வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் அருளாசி தனை
3. ஆசிதனை புகழ்த்துணை நாயனாரும்
அருளுவேன் உலக நலம் காண
வாசி வென்ற ஞானிகள்படை
வலம் வந்து அரங்கன் சேவையை
4. சேவையை காத்து வருக
சேவகனாக செயல் வீரராக
அவனியோர் அரங்கன் தொண்டில்
அடிபணிந்து தொடர்ந்து வர
5. வருகின்ற மக்கள் அனைவருக்கும்
வரங்கள் பல எளிதில் கிட்டும்
தருகின்றேன் என அரங்கன்
தருமத்தில் பொருளுதவி செய்து வரும்
6. செய்துவரும் மக்கள் அனைவருக்கும்
செப்பிடுவேன் அருள் பொருள் பலம்
மெய்ஞானம் பூரணமாய் நிலைத்து
மேலவர்கள் அருளாசியும் கிட்டும்
7. கிட்டவே மனத் தூய்மை படவே
குருமார்க்கம் சன்மார்க்கமதை
தட்டாது ஏற்றுத் தொடரவே
தானவர்கட்கு ஞானிகள் ஆசிபட
8. ஆசிபட இனி பிறவி காணா
அழியாமை எனும் ஞானமுடன்
வாசிவசம் சகல சூட்சுமமும்
வலியவே வரமாக வந்தடையும்
9. அடையவே அரங்க மகானின்
அவதார மகிமை அறிந்து
தடைபடா தொடர்ந்து வந்து
தானவர் வழி ஞானியாக நேரும்

10. நேருமைபட ஆளுமை சக்திகளும்
நீதிவழி காட்டும் அரங்கன்
அருமை அறிந்து உணர்ந்து
அனுகிவந்து ஆசி தீட்சை பெற

11. தீட்சைபெற மாயை இல்லா
தீவினை தடைகள் இல்லா
ஆட்சியாக ஞான ஆட்சிதரநேரும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–